1st November 1962]

விவசாயிகளைக் குடியேற்றுதல்

* 1049 கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு : கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பாசன வசதி செய்து கொடுக்க முடியாத வறண்ட பகுதிகளில் வாழும் விவசாயிகளைத் தண்ணீர் வசதியாயிருந்தும் விவசாயம் செய்ய ஆள் இல்லாமல் இருக்கும் பகுதிகளுக்குக் குடியேற்ற திட்டம் ஏதேனும் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை, ஐயா.

ரசாயன உரங்கள்

* 1050 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சோடியம் சல்பேட்டை சல்பேட் உரம் என்று சொல்லி விற்கப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) அதைத் தடுக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இதுவரை ஒரு புகாரும் வரவில்லை.

(இ) எழாது.

போலீசார் (சம்பள விகிதம்)

* 1051 கேள்வி.—திரு. அ. சாமிதாஸ் : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவிதாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலிருந்து சென்னை ராஜ்யத்திற்கு மாற்றப்பட்ட போலீசார் அனைவருக்கும் சென்னை ராஜ்ய போலீசாருக்குக் கொடுக்கப்படும் சம்பளமும் அலவன்சும் உத்தியோக உயர்வும் கொடுக்கப்பட்டுவிட்டதா ?

(இ) அப்படிக்கொடுக்கப்படவில்லை என்றால் அதற்குரிய காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Fixation of pay in the Madras scales has not yet been done. However, promotions are being ordered.

(b) The services of the Police personnel transferred from the former Travancore-Cochin State had to be first integrated with the services of this State before the question of fixation of their pay in Madras scales could be taken up. Orders for integration ofs. services have been issued already. Action is being taken to fixv. the pay of the transferred personnel in Madras scales of pay. As regards promotion to higher categories, promotion is ordered in Kanyakumari district as is being done in all other districts.